**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, MADURAI**

**M.C.O.P. No. 2141/2019 P.W.3**

Deposition of Witness for the Petitioner / Respondents Solemnly affirmed by of this Court on 09.11.2022 in accordance with the Provisions of Evidence Act X of 1872.

| | | | |
|---|---|---|---|
| Name : | அப்துல் ஜலால் யூசுப் | Father's Name : | முகமது யூசுப் |
| Village : | படமாத்தூர் | Taluk : | சிவகங்கை |
| Caste: | – | Religion: | முஸ்லீம் |
| Calling: | பழைய இரும்பு வியாபாரம் | Age: | 55 |

**மனுதாரர் தரப்பு முதல் விசாரணை :**

என் தரப்பில் பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதில் கண்டுள்ள விவரங்கள் அனைத்தும் தெரியும். படித்து பார்த்து கையெழுத்து செய்தேன்.

| | |
|---|---|
| 1. | என்னுடைய ஆதார் அடையாள அட்டை நகல் மசாஆ 24 ஆகும். (அசலுடன் ஒப்பிடப்பட்டது ) |

1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

நான் போலிசில் புகார் கொடுக்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை. தேவைப்பட்டால் கூப்பிடுகிறேன் என்று சொன்னார்கள். விபத்து நடந்த இடத்திற்கும் படமாத்தூருக்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 55 கிமீ தூரம் இருக்கும். நீதிமன்றத்தில் இருந்து சாட்சியமளிக்க அழைப்பாணை எதுவும் வரவில்லை. குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சி எதுவும் சொல்லவில்லை. TN 47 L 5537 என்ற லாரி ரோட்டின் இடது ஓரத்தில் நின்று கொண்டிருந்ததா என்றால் இல்லை, வேகமாக சென்றுகொண்டிருந்தது. இறந்து போனவர் லாரிக்கு பின்னால் சென்றுகொண்டிருந்தார். (சாட்சி தாமாகவே லாரி சிக்னல் கொடுக்காமல் திடீரென்று நிறுத்தியதால் லாரிக்கு 10 அடிக்கு பின்னால் தலைக்கவசம் அணிந்து சென்ற இறந்து போன நபர் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டது என்று கூறினார்). லாரியை நிறுத்தியதால் பின்னால் சென்ற இறந்து போன நபர் லாரிக்கு பின்புறம் மோதியதால் விபத்து ஏற்பட்டது. இறந்து போன நபர் லாரியிலிருந்து போதிய

இடைவெளி விட்டு கவனமாக வந்திருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் இறந்து போன நபர் 10 அடி இடைவெளி விட்டு கவனமாக தான் வந்தார். இன்று நீதிமன்றத்திற்கு சாட்சியமளிக்க நானாக தான் வந்தேன். இந்த வழக்கு தாக்கல் செய்தது சம்பந்தமான விவரத்தை மனுதாரரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். நான் விபத்தை பார்க்கவே இல்லை என்றும் மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. லாரி ரோட்டின் இடது புற ஓரமாக நின்றுகொண்டிருந்தது என்றும் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த இறந்து போன நபர் தான் கவனமில்லாமல் ஓட்டி வந்து நின்றுகொண்டிருந்த லாரியில் இடதுபின்பாகத்தில் மோதிவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு முழு காரணம் இறந்து போன நபர் என்றும் லாரி டிரைவர் காரணம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–</u> இல்லை. (2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார்).

<u>மறு விசாரணை :–</u> இல்லை.